கரூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பூத் கமிட்டி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் கரூரில் நடைபெற்றது. மாவட்ட கழக செயலாளர், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி சிறப்புரையாற்றினார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

தலைமை - நா.கார்த்திக், வரவேற்புரை - இரா.மணிகண்டன்

கோவை மாநகரில் கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

திண்டுக்கல் ஐ.லியோனி - வி.செந்தில்பாலாஜி சிறப்புரை!

கோவை, ஜூன் 21 -

கோவை மாநகர் மாவட்டக் கழகத்தின் சார்பில் இந்தியாவின் நம்பர் 1 முதலமைச்சர், அன்புத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு கால ஆட்சியின் சாதனைகளை பொது மக்களிடம் எடுத்துக் கூறும் வகையில் "நாடு போற்றும் நான்காண்டு" தொடரட்டும் இது பல்லாண்டு!" கழக சாதனை விளக்க பொதுக்கூட்டம் 21.06.2025 சனிக்கிழமை இன்று மாலை 5.00 மணியளவில், பீளமேடு ரொட்டிக்கடை மைதானத்தில் மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக் தலைமையில் பொதுக்குழு உறுப்பினர் இரா.மணிகண்டன் வரவேற்புரையில் மாநகர் மாவட்டக் கழக துணைச் செயலாளர்கள் கோட்டை அப்பாஸ், தளபதி இளங்கோ, கல்பனா செந்தில், பொருளாளர் எஸ்.எம்.பி.முருகன், பீளமேடு பகுதி கழக பொறுப்பாளர் எ.எஸ்.நடராஜ், ஆவாரம் பாளையம் பகுதி கழக பொறுப்பாளர் ப.மோகன் ராஜ் முன்னிலையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு பாடநூல் கழகத் தலைவர், நகைச்சுவைத் தென்றல் திண்டுக்கல் ஐ.லியோனி, மேற்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில்பாலாஜி, கழக சொத்துப் பாதுகாப்புக் குழு துணைத் தலைவர், முன்னாள் அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, மாநகர் மாவட்ட அவைத்தலைவர், கோவை நாடாளுமன்ற உறுப்பினர், முனைவர் கணபதி ப.ராஜ்குமார், கோவை மாநகராட்சி மேயர் இரங்கநாயகி ராமச்சந்திரன் ஆகியோர் சிறப்புரை யாற்றுகின்றனர்.

இதில் கழக சட்டத் துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் கே.எம்.தண்டபாணி, கழகதீர்மான்குழு இணைச் செயலாளர் பி.நாச்சிமுத்து, கழக சட்டத்துறை இணைச் செயலாளர் வழக்கறிஞர் பி.ஆர். அருள்மொழி, சட்டமன்ற தொகுதி பார்வையாளர்கள் முத்துவேல் ராமசாமி சிங்காநல்லூர், இரா.அன்வர் கான் கோவை தெற்கு, மு.வாசிம் ராஜா கோவை வடக்கு, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி. பாலசுப்ரமணியன், டி.எஸ். பி.கண்ணப்பன், பி.ஆனந்தகுமார், கழக தகவல் தொழில்நுட்ப அணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, கோவை, ஈரோடு, சேலம், நீலகிரி பஞ்சாலை சங்க பொதுச் செயலாளர் சு.பார்த்த சாரதி, கழக தீர்மானக் குழு உறுப்பினர் மு.இரா.செல்வராஜ், கழக மருத்துவர் அணி இணைச் செயலாளர் டாக்டர் ஆர்.கோகுல் கிருபா சங்கர், கழக வர்த்தகர் அணி இணைச் செயலாளர் நா.முருகவேல், கழக இலக்கிய அணி துணைச் செயலாளர் அ.திராவிடமணி, கழக அமைப்பு சாரா ஓட்டுனர் அணி துணைச் செயலாளர் விஷ்ணுபிரபு, கழக கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணைச் செயலாளர் மீனா ஜெயக்குமார், கழக மாணவர் அணி துணை செயலாளர் வி.ஜி.கோகுல், கழக தொழிலாளர் அணி துணைச் செயலாளர் நா.தமிழ்ச்செல்வன், கோவை அரசு போக்குவரத்து கழக பொதுச் செயலாளர் கே.பெரியசாமி பகுதி கழக பொறுப்பாளர்கள் வி.ஐ.பதுருதீன், வ.ம.சண்முகசுந்தரம், பாபு (எ) வீ.அ.பாலசுப்பிர மணியம், பரணி கே.பாக்கியராஜ், கே.எம்.ரவி,

எ.எம்.கிருஷ்ணராஜ், லோகு (எ) லோகநாதன், சி.ராமசந்திரன், குட்டி (எ) சி.ஜெயசந்திரன், மா.நாகராஜ், இரா.சேரலாதன், துரை.செந்தமிழ்ச்செல்வன், எஸ்.எம்.சாமி, ப.அன்பழகன், பி.கஸ்தூரி அருண், சிங்கை மு.சிவா, சேக் அப்துல்லா, ஆர்.எம்.சேதுராமன், பி.சிவராஜ், ப.பசுபதி, என்.ஜே.முருகேசன், ஆ.தேவசீலன், ஆ.கண்ணன், மார்க்கெட் மா.மனோகரன், அஞ்சுகம் எம்.பழனியப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஜோ.நோயல் செல்வம், வெ.ந.உதயகுமார், மு.மா.ச.முருகன், வெ.சசிகுமார், எஸ்.கே.ஆனந்தகுமார், ச.குப்புசாமி, தங்கம் (எ) சந்திரசேகரன், எஸ்.பி.சரஸ்வதி புஷ்பராஜ், ச.கார்த்திகேயன், கல்பனா ஆனந்தகுமார், மாநகராட்சி மண்டலத் தலைவர்கள் இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக், மீனா லோகு, கே.ஏ.தெய்வானை தமிழ்மறை, நிலைக்குழுத் தலைவர்கள் தீபா தளபதி இளங்கோ, பெ.மாரிச்செல்வன், சாந்தி முருகன், வி.பி.முபசீரா, தலைமைக் கழக பேச்சாளர்கள் கோவை சம்பத், சிங்கை பிரபாகரன், சிங்கை சௌந்தர், மாவட்ட அறங்காவலர் குழு தலைவர்கள் மெட்டல் ராஜா (எ) ராஜா மணி சு.தனபால், மாவட்ட அணி அமைப்பாளர்கள் இரா.தனபால், வி.சிவப்பிரகாஷ், ஆர்.கே.சுரேஷ் குமார், ந.அக்ரிபாலு, மு.பிரதீப்குமார், எஸ்.அன்புச்செழியன், எஸ்.கண்ணன், கே.ஆர்.இராஜா, எஸ்.ராஜ்குமார், எஸ்.பூரணசந்திரன், ஏ.எஸ்ஜெ யக்குமார், டி.கண்ணன், நா.பாபு, அ.அபுதாஹிர், வி.மணி, இரா.அர்ஜுனன், எம்.எம்.சஞ்சய்குமார், வி.அன்னம்மாள், சி.ஆர். கனிமொழி, ஸ்ரீ சத்யா கோவை தங்கம் உள்பட அனைத்து சார்பு அணிகளின் தலைவர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள், அனைத்து மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து சார்பு அணிகளின் துணைத் தலைவர்கள் துணை அமைப்பாளர்கள், கழக செயல்வீரர்கள், கழகத் தொண்டர்கள், BLA2 பாகமுகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், பொதுமக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளனர். கூட்டத்தின் இறுதியில் 26 வது வட்டக் கழக செயலாளர் ஆ.மாடசாமி நன்றியுரை யாற்றுகிறார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வி.கணேசன், அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், இளையபெருமாள்நல்லூர் ஊராட்சியில் மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாமினை தொடங்கி வைத்து, பயனாளிகளுக்கு அரசுத் துறைகளின் சார்பில் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் பொ.இரத்தினசாமி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் மற்றும் பலர் உள்ளனர்.

கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதியில்

மக்களுடன் முதல்வர்" திட்ட மூன்றாம் கட்ட முகாம்!

அமைச்சர் கோவி.செழியன் நலத்திட்ட உதவிகளை வழங்கினார் ! என். கௌதமன் பங்கேற்பு!

நாகை, ஜூன் 21 -

நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாகை ஒன்றியம் பாப்பாகோவில், குறிச்சி கீழையூர் ஒன்றியம் சின்னதும்பூர், பிரதாபராமபுரம், திருக்குவளை, கீழ்வேளூர் ஒன்றியம் ஆதமங்கலம், இராதாமங்கலம் ஆகிய ஏழு ஊராட்சிகளில் "மக்களுடன் முதல்வர்" திட்டம் மூன்றாம் கட்ட முகாம் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கலந்துகொண்டு முகாமை தொடக்கி வைத்து நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

நாகை மாவட்டம் கீழ்வேளூர் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட நாகை, கீழையூர், கீழ்வேளூர் ஆகிய ஒன்றியங்களில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர்" திட்டம் மூன்றாம் கட்ட முகாம்களுக்கு நாகை மாவட்ட ஆட்சித் தலைவர் ப.ஆகாஷ தலைமை தாங்கினார். தமிழ்நாடு மீன்வளர்ச்சி கழகத் தலைவர் .என். கௌதமன், கீழ்வேளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி.நாகை மாலி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட வருவாய் அலுவலர் பவணந்தி வரவேற்றார்.

நாகை ஒன்றியம் பாப்பாகோவில், குறிச்சி கீழையூர் ஒன்றியம் சின்ன தும்பூர், பிரதாப ராமபுரம், திருக்குவளை, கீழ்வேளூர் ஒன்றியம் ஆதமங்கலம், இராதாமங்கலம் ஆகிய ஏழு ஊராட்சிகளில்

ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட முகாமை உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கலந்து கொண்டு முகாமை தொடங்கி வைத்து பார்வையிட்டு 104 பயனாளிகளுக்கு ரூ.08 இலட்சத்து 15 ஆயிரத்து 766 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி பேசுகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் நலனை கருத்தில்கொண்டு புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத் தொகை மக்களை தேடி மருத்துவம் போன்ற பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அதனடிப்படை யில் மக்களை தேடி எல்லாம் கிடைக்கும் வகையிலும், மக்களின் சிரமங் களை குறைக்கும் வகையிலும் . தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் திட்டத் தினை தொடங்கி வைத்ததையடுத்து, பல்வேறு திட்டங்க ளின் பயன்களை பெறுவதற்கு ஏதுவாக தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் இம்முகாமினை நடத்துவதற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணையின் படி 'மக்களுடன் முதல்வர்" திட்டம் மூன்றாம் கட்ட சிறப்பு முகாம்கள் நாகப்பட்டினம் மாவட்டம், கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள பாப்பாக்கோவில், குறிச்சி, சின்னதும்பூர், பிரதாபராமபுரம், திருக்கு வளை, ஆதமங்கலம் மற்றும் இராதாமங்கலம் ஆகிய 7 ஊராட்சிகளில்; நடைபெற்றது.

இம்முகாமில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர்மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, கூட்டுறவு உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, எரிசக்தித்துறை, உள்மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை, சமூக சீர்த்திருத்தத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை , வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, வேளாண்மை உழவர் நலத்துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை ஆகிய 15 துறைகள் சார்ந்த 44 சேவைகள் தொடர்பான கோரிக்கைகள் குறித்த மனுக்கள் இம்முகாம்களில் பெறப்பட்டு 30 நாட்களுக்குள் தீர்வு காணப்படும்.

இதுபோன்று, தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்க ளில் கோரிக்கை மனுக்கள் அளிக்க வரும் பொதுமக்கள் தங்களது கோரிக்கையினை கணினியில் பதிவு செய்ய ஆதார் அட்டை, குடும்ப அட்டை, கைபேசி எண் மற்றும் கோரிக்கை தொடர்பான உரிய ஆவணங்களுடன் மனுக்களை அளித்து, தங்களது கோரிக்கைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு ஏதுவாக இம்முகாமினை பயன்படுத்திக் கொள்ளலாம் என உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.

நிகழ்ச்சியில் கீழ்வேளூர் சட்டமன்ற தொகுதி பார்வையாளரும் மாநில விவசாய தொழிலாளர் அணி துணை செயலாளருமான இரா.சங்கர், மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி..மனோகரன், மாற்றுத்திறனாளி நலத்துறை அலுவலர் கார்த்திகேயன், தலை மைச் செயற்குழு உறுப்பினர்கள் க. இராஜேந்திரன், ப.கோவிந்த ராஜன், ஒன்றிய கழகச் செயலாளர்கள் கீழையூர் கிழக்கு ஆ.தாமஸ் ஆல்வா எடிசன், கீழையூர் மேற்கு சோ. பா.மலர்வண்ணன், கீழ்வேளூர் வடக்கு கா.பழனியப்பன், பொதுக்குழு உறுப்பினர்கள் எஸ்.பி.டி. சார்லஸ் கோசி.குமார், வேளாங்கண்ணி பேரூர் செயலாளர் மரிய சார்லஸ், மாவட்ட ஆறுபடை அமைப்பாளர்கள் பெ,முருகானந்தம், பால முரளி, மாவட்ட சார்பணி துணை அமைப்பாளர்கள் எஸ் என்.மோகன்தாஸ், சேகர், தமிழ்வாணன், மகாராஜன், சுந்தரபாண்டியன், சுந்தர வடிவேல், ஏ.எஸ். என் ராஜா, ஜீவானந்தம், அங்காடி சேகர், ஜோதி பாசு, பி.தியாகராஜன், லோகு. பூவை ஆர்.ஜி. முருகு , முகமது ரஃபீக், மு. ப.செல்வம், முத்து ராதாகிருஷ்ணன், ரஹ்மத்துல்லா, செந்தில்,

நாகை தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் திருநா வுக்கரசு, காமராஜ், பிச்சை, கீழ்வேளூர் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றிய நிர்வாகிகள் ஆர்.கே. கண்ணன், ஆர், நடராஜன், சி.வீரமணி. பாரதி மோகன், தங்க,மனோகரன், கணேசன், சிவக்குமார், கிரிதரன், எஸ். புருஷோத்தமதாஸ் உமா பாலமுரளி மதியழகன்,ரவிக்குமார், வெண்ணிலா பாபு,கீழையூர் கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள் மு. ப.ஞானசேகரன், சுப்பிரமணியன், அருள் செந்தில் ஆனந்த கைலாசம், கீழையூர் மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் வை. சண்முகசுந்தரம், நிர்மல் ராஜ், பார்த்திபன், ஜெயந்தி மாசிலாமணி, வி.எஸ். அசோக்அசோக்குமார், மற்றும் ஒன்றிய கிளைக் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி அணிகளின் முன்னாள் பிரதிநிதிகள் கழகத்தினர் சார்பணி நிர்வாகிகள், அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எல். பலராமன்

ஜூன் 21 (2020)

தனது இளம் வயதிலேயே கழகக் கொள்கையால் ஈர்க்கப்பட்டு கழகப் பணியாற்றியவர்

வடசென்னை மாவட்டத்தில் வட்டச் செயலாளர், பகுதிச் செயலாளர் என படிப்படியாக உயர்ந்து மாவட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகம் ஆட்சியில் இருந்தபோதும் – எதிர்க்கட்சியாக இருந்தபோதும், வடசென்னையில் கழகம் வளர பாடுபட்டவர். வடசென்னையில் முத்தமிழறிஞர் கலைஞர், கழகத் தலைவர் ஆகியோர்களை கொண்டு பல பொதுக்கூட்டங்களை எழுச்சியுடன் சிறப்பாக நடத்திக் காட்டியவர்.

கழக தணிக்கைக்குழு உறுப்பினராக பணியாற்றியதுடன், மத்திய கூட்டுறவு வங்கித் தலைவராக பணியாற்றியவர்.

"இவர் பலராமன் அல்ல; 'பலே ராமன்' என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்கள் – ஆர்ப்பாட்டங்களையும் முன்னெடுத்து நடத்திக் காட்டியதோடு, அதில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"கழகப் பணிகள் அனைத்தையும் அமைதியாக, அவர் என்ன மாதிரிப் பணியாற்றுகிறார் என்றே தெரியாத அளவுக்கு அடக்கமாக ஆற்றுவதோடு, அவை அனைத்தையும் நடத்தி முடிப்பார்." என கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

முனுஆதி

ஜூன் 21 (2005)

தாம்பரம் பகுதியில் கழகத்தை வளர்த்த முன்னோடிகளில் ஒருவர்.

நகர்மன்றத் தலைவராக, தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக நான்கு முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

தமிழக சட்டப்பேரவைத் தலைவராகவும் பணியாற்றியவர்.

மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட பல்வேறு அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.